Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, ஆகஸ்ட் 05, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 22

# "தமிழகத்தில் மக்களை தேடி மருத்துவம்"

## மகத்தான திட்டத்தின் தொடக்க விழாவை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிராம பகுதியில் முதல்வர் மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை ஆகஸ்ட் 05 2021: தமிழகத்தில் மக்களை தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது. இந்த திட்டத்தின் தொடக்க விழா கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிராம பகுதியில் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

தமிழகத்தில் சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் போன்ற நாள்பட்ட நோயால் 20 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அரசு ஆஸ்பத்திரிகளில் மாதம் தோறும் மருந்து மாத்திரைகள் வாங்கி சாப்பிடுகிறார்கள்.

அதேபோல் சிறுநீரக செயலிழப்பால் ஏராளமானோர் வாரத்துக்கு ஒன்றிரண்டு முறை டயாலிசிஸ் செய்து கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். புற்றுநோய் பாதிப்பும் அதிக அளவில் இருக்கிறது. ஆனால் பல்வேறு காரணங்களால் இந்த நோயாளிகளில் பலர் முறையாக சிகிச்சை எடுத்துக் கொள்வதில்லை. இதனால் ஆண்டுக்கு சராசரியாக 5 லட்சம் பேர் மரணம் அடைகிறார்கள்.

எனவே இந்த மாதிரி நோயாளிகளை கண்டறிந்து அவர்களுக்கு வீடு வீடாக சென்று மாதந்தோறும் தேவையான மருந்து மாத்திரைகளை வழங்குவது, டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு கையடக்க கருவிகளுடன் வீடுகளுக்கு நேரில் சென்று சிகிச்சை அளிப்பது, பிசியோதெரபி சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கும் பிசியோதெரபிஸ்டுகள் மூலம் வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளிப்பது ஆகியவைதான் இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இந்த திட்டத்தை தொடங்கி வைப்பதற்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து தனி விமானத்தில் ஓசூர் செல்கிறார். 5.25 மணிக்கு ஓசூர் விமான நிலையம் சென்றடைகிறார்.

அங்கிருந்து காரில் கிளரெஸ்டா ஓட்டல் செல்கிறார். இரவில் அங்கு தங்குகிறார்.

இன்று காலை 9.30 மணிக்கு ஓசூரில் இருந்து சூளகிரி புறப்பட்டு செல்கிறார். அந்த கிராமத்தில் விழாவுக்காக திறந்தவெளி மைதானத்தில் மேடை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெறும் விழாவில் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.



தொடக்க விழாவையொட்டி சில வீடுகளுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மருந்து மாத்திரைகள் வழங்குகிறார். முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவருக்கு பிசியோதெரபி சிகிச்சை அளிக்கப்படுவதையும் அவர் பார்வையிடுகிறார்.

தனி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெட்டமுலாயம் என்ற மலை கிராமத்தில் வாழும் மக்கள் 18 கிலோ மீட்டர் தூரம் நடந்துதான் கிருஷ்ணகிரிக்கு செல்ல வேண்டும். கடந்த மாதம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அந்த கிராமத்துக்கு நடந்து சென்று குறை கேட்டார். அப்போது அந்த கிராமத்துக்கு ஆம்புலன்ஸ் வசதி நிரந்தரமாக செய்து தர வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

அதுபற்றி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கவனத்துக்கு மா.சுப்பிரமணியன் கொண்டு சென்றார். அவர்களின் கோரிக்கையை முதல்-அமைச்சர் ஏற்றுக்கொண்டார். நாளை நடைபெறும் விழாவில் அந்த கிராமத்துக்கு இலவச ஆம்புலன்சையும் வழங்குகிறார்.

இதுதவிர ஒரு காலை



இழந்த இரண்டு பேருக்கு தலா ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் பேட்டரியால் செயல்படும் செயற்கை கால்களையும் வழங்குகிறார். சூளகிரியில் முதல்வர் தொடங்கி வைத்ததும் தமிழகம் முழுவதும் இந்த திட்டம் தொடங்கப்படும்.

சூளகிரி நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு அங்கிருந்து காரில் ஓசூர் விமான நிலையம் செல்கிறார். காலை 11 மணிக்கு ஓசூரில் இருந்து சென்னை புறப்படுகிறார்.

முதல்வர் வருகையையொட்டி ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## விக்கிரவாண்டியில் சிறு ,குறு விவசாயிகளுக்கு சான்று வழங்கும் முகாம் கலெக்டர் பங்கேற்பு

விக்கிரவாண்டி, ஆக.05.2021: விக்கிரவாண்டி தாலுகாவிலுள்ள சிறு குறு விவசாயிகளுக்கு சான்று வழங்கும் முகாம் நடந்தது. விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் வருவாய் துறை சார்பில் நடந்த விழாவிற்கு கலெக்டர் மோகன் தலைமை தாங்கி சிறு, குறு விவசாயிகளுக்கு சான்றுகளை வழங்கி பேசியதாவது:

பிரதமரின் நுண்ணுயிர் பாசன திட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் நடப்பாண்டிற்கு 4950 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்த ரூபாய் 23.19 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டின் நிலுவையை சேர்த்து மொத்தம் 11.750 ஹெக்டேரில் திட்டம் செயல்படுத்த திட்ட மிட்டு ரூபாய் 69.616கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

5 ஏக்கர் வரை உள்ள சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மான்யமும் , அதற்கு மேல் நிலம் 12.5 ஏக்கர் வரை விவசாயிகளுக்கு 75 சதவிகித மான்யத்தில் பாசன கருவிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் பயனடைந்து அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன் . இவ்வாறு கலெக்டர் மோகன் பேசினார் .

கம்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற்ற உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு ஊக்க தொகையாக ரூபாய் 10



ஆயிரத்தை கலெக்டர் வழங்கினார்.

டி.ஆர்.ஓ., ராஜசேகரன், பயிற்சி சப்ரீகலெக்டர் ரூபினா, வேளாண்மை இணை இயக்குனர் ரமணன், நேர்முக உதவியாளர் பெரியசாமி, தாசில்தார் தமிழ்செல்வி, உதவி இயக்குனர் டாக்டர் மாதவன்,மண்டல துணை தாசில்தார் செல்வமூர்த்தி மற்றும் அரசு துறை அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர் .

விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் கலெக்டர் மோகன் சிறு , குறு விவசாயிகளுக்கான சான்றிதழை பயனாளிகளுக்கு வழங்கினார்.

## அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தாய்பால் வார விழா

விக்கிரவாண்டி, ஆக.05, 2021: விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக தாய்பால் வார விழா கொண்டாடப்பட்டது.

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தைகள் நலப்பிரிவு சார்பில் நடந்த விழாவிற்கு கல்லூரி டீன் குந்தவி தேவி தலைமை தாங்கி குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். மருத்துவ கண்காணிப்பாளர் புகழேந்தி, ஆர்.எம்.ஓ., டாக்டர் சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர் . பச்சிளம் குழந்தைகள் பிரிவு சிறப்பு டாக்டர் இளையராஜா வரவேற்றார் .

குழந்தைகள் நலப்பிரிவு துறைத்தலைவர் டாக்டர் ஸ்டாலின், டாக்டர் ஆடலரசன், மகப்பேறு பிரிவு துறைத்தலைவர் டாக்டர் ராஜேஸ்வரி, ஆகியோர் கலந்து கொண்டு தாய் பால் மகத்துவம் குறித்தும் , தாய்பால் புகட்டுவதால் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பது குறித்தும் , புட்டி பால் புகட்டுவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பேசினர் . பின்னர் டாக்டர்கள் அனைவரும்



தாய் பால் வார விழா உறுதி மொழி எடுத்தனர் .

குழந்தைகள் பிரிவு டாக்டர்கள் ஹரி, சிவசங்கரி, வினோத், பாலமுருகன் மற்றும் தலைமை செவிலியர்கள், இ.எஸ். செவிலியர் கல்லூரி மாணவ, மாணவிகள்,தாய்மார்கள் , பொதுமக்கள் பலர் விழாவில் கலந்து கொண்டனர் . விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் டீன் குந்தவி தேவி தலைமையில் டாக்டர்கள் உறுதி மொழி ஏற்றனர் .

## செங்கத்தில் நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்ட பத்திரிகையாளர் சங்க (டி யு ஜெ) மாவட்ட செயற்குழு கூட்டத்தில் 104 உறுப்பினர்களுக்கு விபத்து காப்பீடு பாலிசி மாநிலத்தலைவர் பி எஸ் டி புருஷோத்தமன் வழங்கினார்

திருவண்ணாமலை 05, 2021: செங்கத்தில் நடைபெற்ற திருவண்ணாமலை மாவட்ட பத்திரிகையாளர் சங்க (டி யு ஜெ) மாவட்ட செயற்குழு கூட்டத்தில் 104 உறுப்பினர்களுக்கு விபத்து

காப்பீடு பாலிசியினை மாநிலத்தலைவர் பி எஸ் டி புருஷோத்தமன் வழங்கினார். திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு யூனியன் ஆப் ஜர்னலிஸ்ட்ஸ் மாவட்ட

செயற்குழு கூட்டம் செங்கம் கணேசர் திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் வந்தவாசி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. , மாநில நிர்வாகிகள் போளூர் சுரேஷ்,கே முத்து, சண்முகவேல், பி ஆர் சுப்ரமணியன், வளையாபதி,மணிவாசகம், ஜி கே ஸ்டாலின் மற்றும் மாவட்ட பொருளாளர்நடராசன்

ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அனைவரையும் மாவட்ட செயலாளர் தனஞ்செயன் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநிலத்தலைவர் பி எஸ்

டி புருஷோத்தமன் திருவண்ணாமலை மாவட்ட 104 உறுப்பினர்களுக்கு விபத்து காப்பீடு பாலிசியினை அளித்து சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கொரானாவால் இறந்த பத்த்ரிக்கையாளர்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்வது,பத்திரிகையாளர்களை முன்களப்பணியாளர்களாக

அறிவித்ததோடு மட்டுமில்லாது, கொரானா நிதி உதவியாக ருபாய் 5,000/- வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தல் , விடுபட்ட ஊரகப்பகுதி

பத்திரிகையாளர்களுக்கும் நிதி உதவி வழங்க கோருவது,. கொரானாவால் இறக்கும் பத்த்ரிக்கையாளர்களுக்கு ரூபாய் இருபத்தைந்து லட்சம் அளிக்க கோருவது,.

பத்த்ரிக்கையாளர்கள் மீது போடப்பட்டிருந்த வழக்குகளை ரத்து செய்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பது , ,ஆகஸ்ட் முதல் வாரத்தில் தமிழக அரசு

அறிவித்துள்ளபடி கொரானா விழிப்புணர்வு முகாம்களில் கலந்து கொள்வதுடன், அதனை பொது மக்களுக்கு தீவிரமாக எடுத்து செல்வது,

ஓய்வூதியம் பெறுபவர்க்ளுக்கு தற்போது உள்ள நிபந்தனைகளை



தளர்த்துவதுடன், ஊரகப்பகுதி பத்திரிகையாலாளர்களுக்கு பயளிக்கும் வண்ணம் வழிவகை செய்ய

தமிழக அரசுக்கு கோரிக்கை வைப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்டதுணைத்தலைவர்கள் சுப்பிரமணியன்,பாபு,வேணுகோபால்,வேணுவெங்கடேசன்,மாவட்ட செயலாளர்கள் சால்மன்,விஜயகுமார்,, மாவட்ட இணை செயலாளர்கள் கே பி சேகர்,,பாண்டியன், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் சேகர்,லிங்கப்பன், தேசிய நிர்வாக குழு உறுப்பினர்கள் சேது,விஜயபாஸ்கர் மற்றும் மக்கள் தொடர்பு நிர்வாகி ஏழுமலை ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

நிகழ்வில் திருவண்ணாமலை சத்தியசீலன்,கலசப்பாக்கம் தினேஷ்குமார்,செங்கம் சுபாஷ் ஆகியோர் புதிய உறுப்பினர்களாக இணைத்துக்கொண்டனர்.

மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பார்த்தசாரதி,ராஜா,குமார், புருஷோத்தமன்,காஜா ஷெரிப்,பிரேம்குமார், சரவணன்,ரவிச்சந்திரன்,வேல்முருகன், இனாயதுல்லா, செந்தமிழ்செல்வன்,

தாலுக்கா ஒருங்கிணைப்பாளர்கள் ராமகிருஷ்ணன், ராஜேஷ்குமார்,சரவணன்,ஷண்முகம், சேகர், சாந்தசீலன்,கதிரவன்,பூபாலன்,செல்வராஜ் மற்றும் செங்கம் உறுப்பினர்கள்

பாபு,சரவணகுமார்,சரவணன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

## வேப்பூர் அரசு மருத்துவமனையில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் கடைபிடிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது

வேப்பூர், ஆக 05 2021: தமிழகத்தில் கொரோனா தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஆகஸ்ட் 1 தேதி முதல் 8 தேதி வரை கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கடலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மருத்துவமனையில், வேப்பூர் வட்டாட்சியர் செல்வமணி தலைமையில் அரசு தலைமை மருத்துவர் அன்புமணி முன்னிலையில் சுகாதார துறையினர் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டனர் பிரச்சாரத்தில் முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியை கடைபிடித்தல் , கைகளை சுத்தமாக வைத்திருத்தல், அடிக்கடி சோப்பு போட்டு கை கழுவுதல், தடுப்பூசி போடுதல், பொது இடங்களில் மக்கள் கூடுவதை தவிர்த்தல் போன்றவை குறித்து மருத்துவமனைக்கு வந்த பொதுமக்களிடம் விழிப்புணர்வை செய்யப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பன்னீர் செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் ஐயப்பன், ராஜ்மோகன் மற்றும் சுகாதார செவிலியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திண்டிவனத்தில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் பொதுமக்களிடம் ரூ.60 லட்சம் மோசடி செய்த நபர் கைது பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் அதிரடி நடவடிக்கை

திண்டிவனம், ஆக. 05 2021: திண்டிவனத்தில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் நடத்தி பொதுமக்களிடம் இருந்து ரூ. 60 லட்சத்தை மோசடி செய்த நபரை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த ரோசனை பாட்டை பகுதியை சேர்ந்தவர் ராஜாராம் என்பவரது மகன் வேலாயுதம். இவர் விழுப்புரம் பொருளாதார குற்றப்பிரிவு - 2ல் திண்டிவனம், செஞ்சி ரோடு ஸ்வஸ்திக் தியேட்டர் எதிரே சிவா பைனான்ஸ் என்ற பெயரில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் நடத்தி பொதுமக்களிடமிருந்து பணம் மோசடி செய்ததாக புகார் அளித்தார். அதன் பேரில் பொருளாதார குற்றப்பிரிவு டி.எஸ்.பி கந்தன் உத்தரவின் பேரில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் நடத்தி பொதுமக்களிடமிருந்து



ரூ.60 லட்சம் மோசடி செய்த திண்டிவனம் பகுதியை சேர்ந்த சிவா என்கின்ற சிவகுமாரை இன்ஸ்பெக்டர் ரேணுகாதேவி தலைமையிலான போலீசார் கைது செய்து விழுப்புரம் முதன்மை நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தி விழுப்புரம் வேடம்பட்டு சிறையில் அடைத்தனர்.

## ஆவடி அடுத்த திருமுல்லைவாயில் சிறுமியை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தவர் போக்சோ-வில் கைது செய்து

ஆவடி, ஆகஸ்ட் 05, 2021: ஆவடி அடுத்த திருமுல்லைவாயில், தென்றல் நகர் கிழக்கு, காந்தி தெருவில் வசித்து வருபவர் 35 வயதுடைய பாலமுருகனின் மனைவி ஸ்டெல்லா என்பவர் அருகில் உள்ள எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். வீட்டில் தைத்த துணிகளை எக்ஸ்போர்ட் கம்பெனியில் கொடுத்துவிட்டு வர மதியம் 1.00 மணி ஆகிவிட்டது. தனது 12 வயதுடைய மகள் தனியார் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். மகள் வீட்டிற்கு வருவதற்கு தாமதம் ஆனதால் சந்தேகமடைந்த அவர்கள் 2.00 மணி ஆகிவிட்டதால் உடனடியாக காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார். தகவலின்பேரில் போலீசார் சிசி டி வி கேமராக்களை உடனடியாக ஆய்வு செய்து பார்த்ததில் பக்கத்து தெருவில் வசிக்கும் 29 வயதுடைய டிரைவர் குமரேசன் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது, வீட்டின் பாத்ரூமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை காவல்துறையினர் மீட்டு தாயாரிடம் ஒப்படைத்தனர்,

இந்த சம்பவத்தை பற்றி திருமுல்லைவாயல் காவல் ஆய்வாளர்கள் தீவிரமாக சித்ராவிடம் விசாரணை செய்ததில் சம்பவ இடத்தில் வசிக்கும் குமரேசன் தன்னை வீட்டுக்குள் அழைத்துச் சென்று கட்டி பிடித்ததாகவும் முத்தமிட்ட தாகமும் சத்தம் போட்டதால் பாத்ரூமில் தள்ளி கதவை தாழிட்டு விட்டு ஓடி விட்டதாக தெரிவித்தார்.

இது சம்பந்தமாக தாய் ஸ்டெல்லா நேற்று இரவு 9 மணிக்கு ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆய்வாளர் லதாவிடம் புகார் அளித்ததன் பேரில் போக்சோ ஆக்ட்-ல் போலீசார் வழக்குப்பதிவு செய்து குற்றவாளி குமரேசனை கைது செய்து மகளிர் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.




இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தேனி மாவட்டம் வருசநாட்டில் சிறு குறு விவசாயிகளிடம் மனுக்கள் பெறப்பட்டது

தேனி, ஆகஸ்ட் 05, 2021: தேனி மாவட்டம் வருசநாடு பகுதியில் கடமலைக்குண்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தோட்ட வேளாண்மை அலுவலர் முருகேசன் தோட்டக்கலை ராஜா பிரியதர்ஷன் கடமலை மயிலை ஒன்றிய கிராம விஏஓ ஆர் ஐ மற்றும் தோட்டக்கலை உதவியாளர்கள் ஆகியோர் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டம் 2021 22 ஆண்டின் கீழ் 2200 ஹெக்டேர் நிர்ணயம் செய்து ரூபாய் 968 என்பது இலட்சத்திற்கு இத்திட்டம் இலக்கு ஈடு செய்யப்பட்டு இத்திட்டத்திற்கு விவசாயிகள் பி எம் கே எஸ் ஒய் எம் ஐ இணையதளத்தின் வாயிலாக நிலவுடமை ஆவணங்கள் பதிவு செய்ய வேண்டும் அதற்கு தேவையான ஆவணங்கள் சிட்டா அடங்கல் வரைபடம் மற்றும் இணையவழி சிறு குறு விவசாயி சான்று ஆகியவற்றை கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள பயனுள்ள விவசாயிகள் அனைவரும் தோட்டக்கலை அதிகாரிகளிடம் மனுக்களை ஆர்வமுடன் கொடுத்தனர் அதைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் ஆவணங்களை ஆய்வு செய்த பின்னர் முறையான பயனாளிகளுக்கு வழங்கப்படும் என கூறினர் ஆகஸ்ட் 4 கடமலைக்குண்டு தேனி மாவட்டம் கடமலைக்குண்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தோட்ட வேளாண்மை அலுவலர் முருகேசன் தோட்டக்கலை ராஜா பிரியதர்ஷன் கடமலை மயிலை ஒன்றிய கிராம விஏஓ ஆர் ஐ மற்றும் தோட்டக்கலை உதவியாளர்கள் ஆகியோர் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டம் 2021 22 ஆண்டின் கீழ் 2200 ஹெக்டேர் நிர்ணயம் செய்து ரூபாய் 968 என்பது இலட்சத்திற்கு இத்திட்டம் இலக்கு ஈடு செய்யப்பட்டு இத்திட்டத்திற்கு விவசாயிகள் பி எம் கே எஸ் ஒய் எம் ஐ இணையதளத்தின் வாயிலாக



நிலவுடமை ஆவணங்கள் பதிவு செய்ய வேண்டும் அதற்கு தேவையான ஆவணங்கள் சிட்டா அடங்கல் வரைபடம் மற்றும் இணையவழி சிறு குறு விவசாயி சான்று ஆகியவற்றை கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள பயனுள்ள விவசாயிகள் அனைவரும் தோட்டக்கலை அதிகாரிகளிடம் மனுக்களை ஆர்வமுடன் கொடுத்தனர் அதைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் ஆவணங்களை ஆய்வு செய்த பின்னர் முறையான பயனாளிகளுக்கு வழங்கப்படும் என கூறினர்.

# கூட்டேரிப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் கடன் தொகை முழுவதும் செலுத்தி முடித்தும் பத்திரங்கள் திருப்பித் தராததால் வங்கி முன்பு போராட்ட முயற்சி : போலீசார் பேச்சுவார்த்தை

திண்டிவனம், ஆக 05 2021 : திண்டிவனம் அடுத்த கூட்டேரிப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் போராட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த நடுக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை என்பவரது மனைவி இருசம்மாள் மேலும் இவருடன் சுமார் 10க்கும் மேற்பட்டோர் கடந்த 2000 - ஆண்டில் கூட்டேரிப்பட்டில் இயங்கி வரும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் நடுக்குப்பத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குனர் ராஜவேணியின் மூலம் கடன் பெற்றுள்ளனர். இந்த கடன் தொகையை கடந்த 2010-ஆம் ஆண்டு முழுவதுமாக செலுத்திவிட்ட நிலையில், அவர்கள் கடனுக்காக வங்கியில் அடமானம் வைத்த நிலப்பத்திரத்தை வங்கி நிர்வாகம் இதுநாள் வரையில் திருப்பி தராமல் இழுத்தடித்து வந்துள்ளனர். இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை வங்கியில் முறையிட்டும் உரிய நடவடிக்கை இல்லை என தெரியவருகின்றது. அடுத்தடுத்த மேலாளர்கள் மாறி வந்த நிலையிலும் அவர்கள் இதனை தட்டிக்கழிப்பதிலேயே காலம் தாழ்த்தி வந்தனர். இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது அவசரத் தேவைகளான பிள்ளைகள் திருமணம் , கல்விச் செலவு உள்ளிட்ட பல்வேறு அவசர செலவிற்காக தங்களது நிலத்தை அடமானம் வைக்கவும், விற்பனை செய்யவும் முடியாமல் மன உளைச்சலுக்கு ஆளாகி வந்தனர்.



இந்நிலையில் நேற்று வங்கியின் முன்பு திரண்ட பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் 10-க்கும் மேற்பட்டோர் வங்கியின் உள்ளே சென்று வங்கி மேலாளரிடம் முறையிட்டனர். அப்பொழுது வங்கி ஊழியர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் வங்கியின் முன் திரண்டு பாதிக்கப்பட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மயிலம் இன்ஸ்பெக்டர் கிருபாலட்சுமி பாதிக்கப்பட்டவர்களுடனும், வங்கி நிர்வாகத்திடமும் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதன் பேரில் போராட்டத்தில் ஈடுபட முயன்றவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# கூட்டேரிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கல்

திண்டிவனம், ஆக 05 2021: திண்டிவனம் அடுத்த கூட்டேரிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் மயிலம் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் கொரோனா மூன்றாவது அலை பரவலைத் தடுக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது இதேபோல் விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், கூட்டேரிபட்டு நான்கு முனை சந்திப்பில் மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் மயிலம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை சார்பில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர் சோழன், மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோசப் கிறிஸ்து ராஜ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன், மயிலம் இன்ஸ்பெக்டர் கிருபாலட்சுமி,



மயிலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தேன்மொழி, டாக்டர் தனலட்சுமி, சுகாதார ஆய்வாளர் துரைசாமி ஊராட்சி செயலர் நடராஜன் மற்றும் துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சென்னையில், இந்தியா - நமீபியா வர்த்தக உச்சி மாநாட்டை, நமீபிய வர்த்தக ஆணையர் டாக்டர் பி.ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

சென்னை ஆகஸ்ட் 05, 2021: இந்தியா - ஆப்பிரிக்கா வர்த்தக கவுன்சில் மற்றும் இந்தியா - நமீபியா வர்த்தக மன்றம் ஆகியவை இணைந்து, இந்தியா மற்றும் நமீபியாவுக்கு இடையிலான வர்த்தக மற்றும் வணிக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில், சென்னை அசோக் நகரில் இந்தியா - நமீபியா வர்த்தக ஆணைய அலுவலகத்தை திறக்க உள்ளன.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மற்றும் வணிக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில், இந்தியா - நமீபியா வர்த்தக உச்சி மாநாடு, சென்னை கிரவுன் பிளாசா ஹோட்டலில் தொடங்கியது. மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட நமீபிய வர்த்தக ஆணையர் டாக்டர் பி.ராதாகிருஷ்ணன் வர்த்தக மாநாட்டை தொடங்கி வைத்தார். மாநாட்டில் இந்தியாவுக்கான நமீபிய தூதர் கேப்ரியல் பாண்டுரேனி சினிம்போ, நமீபியாவுக்கான வர்த்தக இணைப்பாளர் ஆஸ்கார் சிகண்டா, நமீபியா வர்த்தக ஆணையர் டாக்டர் பி.ராதாகிருஷ்ணன் மற்றும் முக்கிய அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் வர்த்தகத்திற்கான ஆர்வம் அதிகரித்து வரும் நிலையில், வர்த்தகத்தில் வளர்ந்து வரும் ஆப்பிரிக்க நாடாக நமீபியா உள்ளது. இந்த நிலையில், நமீபிய வர்த்தக ஆணையர் டாக்டர் பி.ராதாகிருஷ்ணன் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் இந்தியா - நமீபியா வர்த்தக ஆணைய அலுவலகம், இருநாடுகளுக்கு இடையில் வலுவான வர்த்தக ஒப்பந்தங்களை உருவாக்கும்.



மேலும், புது டெல்லியில் உள்ள நமீபிய தூதரகத்தின் மூலம் நேரடியாக செயல்படும் இந்த அலுவலகம், நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு வர்த்தக வாய்ப்புகளைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டின் தொடக்க விழாவில் பேசிய நமீபிய தூதர் கேப்ரியல் பாண்டுரேனி சினிம்போ, இந்தியாவில் மருந்து மற்றும் சுகாதார தொழில்நுட்பம் மிகவும் சிறந்து விளங்கும் நிலையில், அதனை நமீபியாவிலும் கொண்டு வருவதே தங்களது முக்கிய இலக்காக இருக்கும் என்றார். அதேசமயம் நமீபியாவில் சிறந்து விளங்கும் விவசாயம், உணவு ஆகியவற்றை இந்திய நிறுவனங்களுக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# விக்கிரவாண்டி டோல் பிளாசாவில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் கலெக்டர் பங்கேற்பு

விக்கிரவாண்டி, ஆக.05 2021: விக்கிரவாண்டி டோல்பிளாசாவில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் தடுப்பூசி முகாம் நடந்தது.

விழுப்புரம் மாவட்ட கல்வித்துறை , போக்குவரத்து துறை, , சுகாதாரதுறை, நெடுஞ்சாலை துறை மற்றும் பேரூராட்சி, டோல் பிளாசா இணைந்து நடத்திய விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு மாவட்ட கலெக்டர் மோகன் தலைமையில் அனைவரும் கொரோனா நோய் தடுப்பு உறுதிமொழி எடுத்தனர். பின்னர் வாகனஓட்டிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை கலெக்டர் வழங்கினார்.

பயணிகளுக்கும் , பொதுமக்களுக்கும் கொரோனா தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்த கலெக்டர் மோகன் , தடுப்பூசி சான்றிதழை வழங்கினார்.

டி.ஆர்.ஓ., ராஜசேகரன், சப்ரீகலெக்டர் பயிற்சி ரூபினா, சுகாதாரதுறை துணை இயக்குனர் செந்தில்குமார், சி.இ.ஓ., கிருஷ்ணபிரியா, டி.இ.ஓ., கிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் வெங்கடேசன், சிவக்குமார், தாசில்தார் தமிழ்செல்வி, வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் வினோத்,பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாதுரை , வட்டார கல்வி அலுவலர் தேன்மொழி ,இன்ஸ்பெக்டர் வினாயக முருகன், சப்ரீஇன்ஸ்பெக்டர் பரணிநாதன், டோல் பிளாசா பொதுமேலாளர் முத்து அண்ணாமலை , மோட்டா வாகன ஆய்வாளர்கள் கோவிந்தராஜ்,மாணிக்கம் ஆகியோர் உடன் பிரச்சாரம் செய்தனர் .

பிரச்சாரத்தில் பெருமாள், ஹேமலதா குழுவினரால் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது.டோல் பிளாசா துணை மேலாளர்கள்



அமிர்தலிங்கம், சொர்ணமணி, அசோக்குமார் , ஜே.ஆர்.சி., மாவட்ட கன்வீனர் பாபு செல்வதுரை, இணை கன்வீனர் தமிழழகன், சாரண இயக்க பயிற்சி ஆணையம் கற்பகம் ,துணை அமைப்பு ஆணையர் சோபியா, செயலாளர் மணி, சுகாதார மேற்பார்வையாளர் கிருஷ்ணன் , ஆய்வாளர் பாபுமற்றும் அனைத்து அரசு துறை அதிகாரிகள் , பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் .

விக்கிரவாண்டி டோல் பிளாசாவில் கலெக்டர் மோகன் தலைமையில் அரசு அதிகாரிகள் கொரோனா நோய் தடுப்பு உறுதிமொழியை ஏற்றனர் .

விக்கிரவாண்டி டோல் பிளாசாவில் கலெக்டர் மோகன் வாகன ஓட்டிகளுக்கான தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்தார்.

# தமிழகத்தில் நோய்தொற்று 3வது அலை தடுப்பு நடவடிக்கையாக தமிழக முதல்வர் பேரூராட்சிகளில் பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு நடவடிக்கை

மதுரை, ஆகஸ்ட் 05, 2021: தமிழகத்தில் நோய்தொற்று 3வது அலை தடுப்பு நடவடிக்கையாக தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி தமிழகம் முழுவதும் உள்ள பேரூராட்சிகளில் பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு நடவடிக்கை நடைபெற்று வருவதை தொடர்ந்து மதுரை மாவட்டம் எழுமலை பேரூராட்சியில் பேரூராட்சிகளின் ஆணையாளர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரையின்படி எழுமலை பேரூராட்சி செயல் அலுவலர் ஜெய மாலு தலைமையில் எழுமலை பேரூராட்சிக்குட்பட்ட வர்த்தக நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வருவாய் வட்டாட்சியர் ரவிச்சந்திரன் சார்பு ஆய்வாளர் முருகன் பேரூராட்சி பணியாளர்கள் பரமசிவம் நாகராஜ் செல்லப்பாண்டி சுந்தரம் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் வியாபாரிகள் அரசியல் கட்சி பிரமுகர்கள் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கோவை துடியலூரில் கஞ்சா விற்பனையில் ஈடுபடுபவர்களை கைது செய்ய கோரி மேட்டுப்பாளையம் சாலையில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்

கோவை, ஆகஸ்ட் 05, 2021: கோவை துடியலூர் ரயில்வே ஸ்டேசன் ரோடு பகுதிகளில் கஞ்சா போதையில் சில இளைஞர்கள் அட்டகாசம் செய்துவந்ததாக அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் துடியலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

மேலும் அந்த இளைஞர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. புகாரைத் தொடர்ந்து நேற்று 2 இளைஞர்களை அழைத்து வந்து போலிசார் விசாரணை நடத்தி விடுவித்துள்ளனர்.

இந்நிலையில் அந்த இளைஞர்கள் புகார் அளித்த இளைஞர்களை வீட்டுக்கு சென்று தாக்கியதாக கூறி அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 50 க்கும் மேற்பட்டோர் துடியலூர் பேருந்து நிறுத்தத்தில் கோவை மேட்டுப்பாளையம் சாலையில் அமர்ந்து சாலைமறியலில் ஈடுபட்டனர்.

சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள் கஞ்சாவால் இளைஞர்கள் சீரழிவதாக கூறி கஞ்சா விறபனை செய்பவர்களை கைது செய்யக்கோரி கோசங்களை எழுப்பினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த துடியலூர்



காவல் துறையினர் தாகுதலில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து சாலைமறியலை கைவிட்டனர்.

இதனால் கோவை மேட்டுப்பாளையம் சாலையில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# சென்னையில் சத்யம் தொலைக்காட்சி நிறுவனத்தின்மீது கோர தாக்குதல்

சென்னை, ஆகஸ்ட் 05, 2021: சென்னையில் சத்யம் தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது கோர தாக்குதல் நடைபெற்றது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. சத்யம் தொலைக்காட்சி இச்சம்பவம் நடைபெற்றபிறகும் அந்த நிறுவனத்திற்கு போலீஸ் பாதகாப்பு வலை ஏற்படுத்தப்படவில்லை என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு சத்யம் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பாதுகாப்பை வழங்கப்படவேண்டும் என்று சென்னை நிருபர்கள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

ஒரு வன்முறையாளர் ராயபுரத்தில் உள்ள சத்யம் தொலைக்காட்சி நிறுவனத்திற்குள் புகுந்து , ஒரு பெரிய வாளுடன் வன்முறையில் ஈடுபட்டார். அந்த நிறுவனத்தின் அலுவகத்தில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியதாக சத்யம் தொலைக்காட்சி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளார்கள். ராயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட பின்னர் போலீசார் அந்த நபரை கைது செய்தனர். ஆனால் காவல் வாகனங்களோ, காவலர்கள் அங்கே நிறுத்தகப்படவில்லை என்று அந்த நிறுவத்தினர் தெரிவிக்கின்றார்கள். எனவே உடனடியாக காவல் துறையின் காவலர்கள் அங்கே நிறுத்தகப்படவேண்டும், போதிய பாதுக்காப்பு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று சென்னை நிருபர்கள் சங்கம் முதல்வரைக் கேட்டுக்கொள்கிறது.

இந்தத் தாக்குதலுக்கு பின்னால் இருக்கும் சக்திகளைக் கண்டு அறிந்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று சென்னை நிருபர்கள் சங்கம் தனது அறிக்கையில் தெரிவிக்கிறது.

# இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் அங்ககச் சான்றிதழ் பெற விண்ணப்பிக்கலாம் என விருதுநகர் விதைச்சான்று உதவி இயக்குநர்: உமா தெரிவித்துள்ளார்

விருதுநகர், ஆகஸ்ட் 05, 2021: இயற்கை வேளாண்மை மூலமாக உற்பத்தி செய்யப்படும் உணவுப் பயிர்கள், பழங்கள், காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைப்பதுடன் மண் வளம் பாதுகாக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மாசுபடுதல் குறைகிறது. சந்தையில் விற்பனை செய்யும்போது அங்ககச் சான்றிதழ் பெறும் போது, விற்பனை வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கிறது. இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உணவுப் பொருள்களுக்கு மத்திய அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு சான்றளிக்கப்படும் முறையே அங்ககச் சான்றளிப்பு எனப்படுகிறது.

மேலும், குறிப்பிட்ட உற்பத்தி அல்லது பதப்படுத்தும் முறையில் விளைபொருள்களின் தரத்தை நிர்ணயம் செய்தும் வழி முறைகள் ஏற்படுத்தியும் உறுதியாக்கம் செய்தும் அங்ககச் சான்றளிப்பு உத்தரவாதம் வழங்குகிறது. இத்திட்டத்தின்படி அங்ககச் சான்றிதழ் பெற தனி நபராகவோ, குழுவாகவோ அல்லது பெரு வணிக நிறுவனங்களும் பதிவு செய்து கொள்ளலாம். அங்கக விளைபொருள்களை பதன் செய்வோரும் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம்.

விண்ணப்ப படிவங்களை https://www.tnocd.net/என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆங்ககச் சான்றளிப்புக்கு விண்ணப்பிக்க விண்ணப்பப்படிவம் 3 நகல்கள், பண்ணையின் பொது விவரக்குறிப்பு, வரைபடம், மண் மற்றும் நீர்ப் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர்த் திட்டம், துறையுடனான ஒப்பந்தம் 3 நகல்கள், நில ஆவணம், நிரந்தர கணக்கு எண் அட்டை நகல், ஆதார் நகல், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம்ஆகியவற்றுடன் உரிய கட்டணம் செலுத்தி விருதுநகர் விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அங்ககச் சான்றளிப்பிற்கு விண்ணப்பிக்கத் தேவையான விவரங்கள் மேலும் பெற விருதுநகர்; விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை உதவி இயக்குநர்; அலுவலகத்தை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி





மரக்காணம்: விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், அனுமந்தை சுங்கச்சாவடியில் கொரோனா மூன்றாவது அலை குறித்து இருசக்கர வாகனங்கள், கார், பேருந்து ஆகியவற்றை நிறுத்தி விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கியும், கபசுர குடிநீரும் வழங்கப்பட்டது. மரக்காணம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெகதீசன், துணை வட்டாட்சியர் சுந்தர்ராஜன், வட்டார சுகாதார ஆய்வாளர் மனோகர், காவல்துறை ஆய்வாளர் கலந்து கொண்டனர்.



திருப்பூர், ஆகஸ்ட் 05, 2021: அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில துணைத் துணைத் தலைவர் எஸ். கர்ணன் தேவர் தனது இல்ல அழைப்பிதழை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது கருணாஸ் தேவரிடம் கொடுத்தார். உடன் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் பல்லடம் ஒன்றிய பொதுச் செயலாளர் டெல்டா தனசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதலமைச்சர், இரங்கல்



ஆகஸ்ட் 05, 2021: ஊடகவியலாளர் செந்தில்வேல் அவர்களின் தந்தையார் திருநாவுக்கரசு அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன். பல சோதனைகளைக் கடந்து தமிழ் கேள்வி வலையொளி பக்கத்தில் ஊடகப் பணியாற்றி வரும் செந்தில்வேல் அவர்கள் இந்தத் துயரிலிருந்து விரைந்து மீள வேண்டும். தந்தையை இழந்து வாடும் செந்தில்வேல் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மதுரை: மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் நோய் தடுப்பு நடவடிக்கையாக வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார் தலைமையில் அப்பகுதியில் உள்ள சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வைரஸ் நோய்த் தடுப்பு விதிமுறை குறித்தும் சமூக இடைவெளி கடைப்பிடித்தல் அத்தியாவசியம் குறித்தும் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அலுவலக ஊழியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

STAR RAINBOW SERVICES
8144337349 / 8148231942
PROFESSIONAL TRANSLATION SERVICE FOR ALL LANGUAGES
DTP DESIGNING
SRS NOTARY PUBLIC SERVICES
R. Ravi Moorthy B.Sc., BL.
ONLINE PASSPORT, PCC, AFFIDAVITS, PAPER ADVT. NAME CHANGE REGISTRATION, LEGAL OPINION ATTESTATION & ALL LEGAL WORKS



தூத்துக்குடி: தூத்துக்குடி அருள்ராஜ் ஹாஸ்பிட்டல் அருகில் 150. வருடத்திற்கு மேலாக பழமை வாய்ந்த கோவிலாக கருதப்படும் ஸ்ரீ முச்சந்தி இசக்கி அம்மன் கோவிலை மாநகராட்சியின் சார்பில் சாலை விரிவாக்கம் செய்வதற்காக இடிக்கப் போகிறோம் என்று அதிகாலை 6. மணிக்கு வந்திருந்த அதிகாரிகளிடம் கோவில் நிர்வாகிகள் பேச்சுவார்த்தை தூத்துக்குடியில் பரபரப்பு.



மதுரை, ஆகஸ்ட் 05, 2021: தமிழகத்தில் நோய்தொற்று 3வது அலை தடுப்பு நடவடிக்கையாக தமிழக முதல்வரின் அறிவிப்பின்படி தமிழகம் முழுவதும் உள்ள பேரூராட்சிகளில் பல்வேறு வகைகளில் விழிப்புணர்வு நடவடிக்கை நடைபெற்று வருவதை தொடர்ந்து மதுரை மாவட்டம் எழுமலை பேரூராட்சியில் பேரூராட்சிகளின் ஆணையாளர் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரையின்படி எழுமலை பேரூராட்சி செயல் அலுவலர் ஜெய மாலு தலைமையில் எழுமலை பேரூராட்சிக்குட்பட்ட வர்த்தக நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வருவாய் வட்டாட்சியர் ரவிச்சந்திரன் சார்பு ஆய்வாளர் முருகன் பேரூராட்சி பணியாளர்கள் பரமசிவம் நாகராஜ் செல்லப்பாண்டி சுந்தரம் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் வியாபாரிகள் அரசியல் கட்சி பிரமுகர்கள் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இம்பிளாண்ட்ரி இன்டர்நேஷனல் டென்டல் ஆஸ்பிட்டல்ஸில் கருப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட பார்வைத்திறனற்ற நபருக்கு கன்ன எலும்பு உட்பொருத்தி தமிழ்நாட்டின் முதல் சாதனை நிகழ்வு



